விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் புதிதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு இன்று திறந்து வைப்பதையடுத்து திறப்பு விழா பணிகள் மற்றும் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள பல்வேறு வசதிகள் குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.

பெருங்குடியில் சுற்றுச்சூழல் பூங்கா!

சென்னை, ஜன.4- பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச் சூழல் பூங்கா (Eco Park) அமைப்பது தொடர்பான பொதுமக்கள் பங்களிப்புக் கூட்டம் 08.01.2024 (திங்கட் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக் கூடம், ஐ.ஐ.டி. காலனி, பள்ளிக்கரணை, சென்னை 600 100 என்ற இடத்தில் மேயர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டு 08.01.2024 (திங்கட்கிழமை) அன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியத்தில் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மலைக்குடிப்பட்டியில் அன்னவாசல் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.மாரி முத்து தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன் வரவேற்புரையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன ஆகியோர் கழக இளைஞர் அணி செயலாளரை வாழ்த்தி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கியும் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் விவசாயத் தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், விராலிமலை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி.ஐயப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.செந்தில்குமார், சி.ஆர்.வி.சித்ரா, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு

மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.4- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது என “தினகரன்” நாளேடு தனது தலையங்கத்தில் “மக்களுக்கான அரசு” என தலைப்பிட்டு பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

2023ஆம் ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமை தொகை, அவள் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, புதுமை பெண் திட்டம் விரிவாக்கம், மழை, வெள்ளம் நிவாரணம் என மக்களுக்கான அரசாக செயல்பட்டது. இது பெண்கள், விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சேது சமுத்திர திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்ற தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு அரசு பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் தொடங்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு பழநி மலை கோயில் குடமுழுக்கு, அரசு விரைவு பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய சென்னை பஸ் செயலி அறிமுகமானது. மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் விரிவாக்க மானது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம், 433 அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.

மின் வாகன கொள்கையை அறிவித்து ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலை வாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமலானது. மகளிர் காவல்துறை சார்பில் ‘அவள்’ திட்டம் தொடங்கப்பட்டு பெண் காவலர்களுக்கு விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.

சென்னை அடுத்த ஓரகடத்தில் நிறுவியுள்ள 4.0 தொழில்நுட்ப மையங்கள், 1,000 படுக்கைகளுடன் உலகத்தரத்தில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, கடலூர் பண்ருட்டியில் முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமம் தொடங்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.70,000 கடனுதவி திட்டம்,500 நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் திறக்கப்பட்டது. மதுரையில் பிரமாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பும், முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

தினகரன்

ஜனவரி 2, 2024 செவ்வாய்க்கிழமை

மக்களுக்கான அரசு

2023ம் ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமை தொகை, அவள் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி, புதுமை பெண் திட்டம் விரிவாக்கம், மழை, வெள்ளம் நிவாரணம் என மக்களுக்கான அரசாக செயல்பட்டது. இது பெண்கள், விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சேது சமுத்திர திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்ற தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு அரசு பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் தொடங்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு பழநி மலை கோயில் குடமுழுக்கு, அரசு விரைவு பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய சென்னை பஸ் செயலி அறிமுகமானது. மாணவிகளுக்கு மாதம் ₹1,000 உதவித்தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் விரிவாக்கமானது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம், 433 அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண நிதியும், தென்காசி, கன்னியாகுமரிக்கு ரூ.1,000 நிவாரணம் வழங்கப்பட்டது. கிளாம்பாக்கத்தில் இந்தியாவிலேயே மிகப்பெரிய ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்’ திறக்கப்பட்டது.

சென்னையில் ரூ.4,276 கோடியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அடிக்கல், தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டமும், பிரபல பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சௌந்தரராஜனுக்கு மதுரையில் சிலை திறப்பும் வரவேற்பை பெற்றது. நடப்பாண்டில் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அமலானது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமை தொகை’ திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு மேல் பயன்பெறுகிறார்கள். உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதி சடங்குகள் அரசு மரியாதை உத்தரவு பாராட்டை பெற்றது. சென்னையில் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் திருவுருவச்சிலை, சாலைகள் குறித்து புகார் சொல்ல ‘நம்ம சாலை’ என்ற புதிய செயலி, உங்களை தேடி, உங்கள் ஊரில்’ திட்டம் அமலானது. ஒ.எம்.ஆர். சாலையில் ‘U’ வடிவ மேம்பாலம், முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையும் திறக்கப்பட்டது.

இதுபோன்ற மக்களுக்கான திட்டங்கள் மூலம் மக்களை வறுமையில் இருந்து மீளவும், பெண்களுக்கான பொருளாதாரத்தை உயர்த்தவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள்-2023!

ஜன.19 முதல் 31 வரை நடைபெறுகிறது!

சென்னை, ஜன. 4- ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டிற்கு 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022ம் ஆண்டிற்கு மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 19.01.2024 முதல் 31.01.2024 வரை தமிழ்நாட்டில் நடத்தப்பட உள்ளது. அதற்கான தேர்வுப் போட்டிகள் கீழ்க்காணும் வகையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு: குத்துச் சண்டை, (ஒவ்வொரு பிரிவிற்கும் தகுதியான ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்). நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: தேதி பின்னர் அறிவிக்கப்படும், ஆண்கள்: 48 kg, 51 kg, 54 kg, 57 kg, 60 kg, 63.5 kg, 67 kg, 71 kg, 75 kg, 80 kg. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: அண்ணா விளையாட்டரங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருச்சி. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: (ஆண்கள்) 06.01.2024 காலை 7.00 மணி.

விளையாட்டு : துப்பாக்கி சுடுதல் (தகுதியான ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப் படுவர்). நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: Skeet, ஆண்கள்: Skeet. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: டாக்டர் சிவந்தி ஆதித்தன் துப்பாக்கி சுடும் வளாகம், அலமாடி, சென்னை. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு: கட்கா (Gatka) (Single Soti Individual), நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:1, ஆண்கள்:1. விளையாட்டு : Farri Soti Individual, நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:1, ஆண்கள்:1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு : மல்லர் கம்பம்(Mallakhamb), நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்:6, ஆண்கள்:6. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்டவிளையாட்டரங்கம், விழுப்புரம். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 04.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு: தங்-டா (Thang-Ta), PHUNABA AMA, நடத்தப்படும்விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: 52 Kg-1, 56 Kg-1, ஆண்கள்: 56Kg-1, 60Kg-1. விளையாட்டு : PHUNABA ANISHUBA, நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: 52 Kg-1, 56 Kg-1, ஆண்கள்: 56Kg-1, 60Kg-1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி

விளையாட்டு : ஜுடோ (ஒரு நபர் மட்டும் தேர்ந்தெடுக்கப் படுவர்), நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: பெண்கள்: Below 40Kg-1, Below 48Kg-1, Below 57Kg-1, Above 63Kg-1, ஆண்கள்: Below 55Kg-1, Below 60Kg-1, Below 66Kg-1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், கரூர். தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி.

விளையாட்டு : யோகாசனம், நடத்தப்படும் விளையாட்டுப் பிரிவுகள்: Artistic Yogasana (Pair) - 1 Pair, Traditional Yogasana பெண்கள்: 1, ஆண்கள்: 1. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் இடம்: மாவட்ட விளையாட்டரங்கம், நேரு பூங்கா வளாகம், சென்னை. தேர்வுப் போட்டிகள் நடைபெறும் தேதி/நேரம்: 06.01.2024, காலை 7.00 மணி

விதிமுறைகள்:

பங்கு பெறும் வீரர் / வீராங்கனைகள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்.

பங்கு பெறும் வீரர் / வீராங்கனைகள் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் இரண்டு சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆதார் அடையாள அட்டை (அல்லது) பாஸ் போர்ட், பிறப்பு சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.01.2023 அன்றோ அல்லது அதற்கு முன் நகராட்சி/கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கப்பட்டது), பள்ளி சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்.

பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்படாது.

இவ்வாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை - துறைமுகம் தொகுதி - கல்யாணபுரம் திட்டப் பகுதியில் புதிய

அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறப்பு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன.4- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய கல்யாணபுரம் திட்டப்பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளை விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும் என ஆய்வு செய்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (2.1.2024) கல்யாணபுரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்பின் கட்டுமான பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசுகையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் ரூ. 44.91 கோடி மதிப்பீட்டில் 288 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. ஏற்கனவே இங்கு வசித்த 254 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்து மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளை தேர்ந்தெடுத்து ஒதுக்கீடு செய்யப்படும்.

இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 412 ச.அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

இதில் காற்றோட்ட வசதியுடன் கூடிய வசிப்பறை, சமையலறை, குளியலறை கழிவறை மின்தூக்கி மற்றும் மின் ஆக்கி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. மேலும் பூங்கா மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, வாரிய மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரண உதவி!

அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

திண்டுக்கல், ஜன.4- தூத்துக்குடி வட்டம், மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம் மற்றும் மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக்கடைகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000 நிவாரணத்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில் பெய்த அதிகன மழையின் காரணமாக தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம், மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 31.12.2023 அன்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தேன்.

மேலும், இப்பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக் கடைகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000 நிவாரணத்தொகை ஆகியவற்றை வழங்கினோம். முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணமாக ரூ.6,000 நிவாரணத்தொகை மற்றும் 5 கிலோ தரமான அரிசி வழங்கியதற்கு பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்து மகிழ்ச்சியோடு அவற்றை பெற்று சென்றனர். மேலும் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட அரிசி நல்லமுறையில் வழங்கப்படுகிறதா என்பதையும் நாங்கள் ஆய்வு செய்தோம், என அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு வடக்கு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் ஒன்றியம் சின்னத்தம்பி பாளையம் ஊராட்சியில் வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் கிளைக் கழக செயலாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் குறித்தும் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்தும் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம் ஆலோசனை வழங்கி பேசினார். கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர் மாதேஷ்வரன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் நல்லசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. மூத்த முன்னோடி

இரா.நாகரத்தினம் மறைவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜன.4-

சேலம் மத்திய மாவட்ட, தி.மு.க. முன்னோடி இரா. நாகரத்தினம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி தி.மு.க.

மூத்த முன்னோடி, முன்னாள் ஓமலூர் வட்ட தி.மு.க. செயலாளர், மொழிப்போர்த் தியாகியும். பூசாரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் காடையாம்பட்டி ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளராகவும் இருந்த ‘வட்டம்’ என்று அழைக்கப்படும் இரா. நாகரத்தினம் (வயது 89) இயற்கை எய்தினார் என்பதை அறிந்து துயரம் அடைந்தேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும். கழக தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி,ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், பிலிச்சிக்குழி ஊராட்சியில், (27.12.2023) அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை உடையார்பாளையம் கோட்டம் சார்பில் நடைபெற்ற, சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கால்நடை உதவி இயக்குநர் மருத்துவர் ரமேஷ், ஒன்றியக் குழு உறுப்பினர் ராஜேஸ்வரி வீரமோகன், ஊராட்சிமன்ற தலைவர் சுந்தர்ராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வீர.சிவா மருத்துவர் இளையராஜா மற்றும் மருத்துவ அலுவலர்கள், கால்நடை பணியாளர்கள், கால்நடை விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.